# தினத்தந்தி (04.02.2020)




மாவட்ட அளவில் நடந்த கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு கோப்பை வழங்கியபோது எடுத்த படம்.

### காகித ஆலை குடியிருப்பு வளாகத்தில்

# மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி

## வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு

கரூர், பிப்.4-

காகித ஆலை குடியிருப்பு வளாகத்தில் மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது. இதையடுத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

### கைப்பந்து போட்டி

கரூர் மாவட்டம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில், மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி காகித ஆலை குடியிருப்பு வளாகத்தில் நடந்தது. போட்டியினை முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன், மற்றும் முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராஜூ ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இப்போட்டியில், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருள்முருகன் பாலிடெக்னிக் கல்லூரி, குமாரசாமி பொறியியல் கல்லூரி, சேரன் உடற்கல்வி கல்லூரி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு உடற்கல்வி கல்லூரி, கரூர் பாலிடெக்னிக் கல்லூரி, குளித்தலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளிட்டவற்றின் சார்பில் 12 அணிகள் கலந்து கொண்டன.

### பரிசு

இதில் இறுதி போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பெற்ற கரூர் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணிக்கு ரூ.5 ஆயிரம் மற்றும் கோப்பையும், 2-வது இடம் பெற்ற சேரன் உடற்கல்வி கல்லூரி அணிக்கு ரூ.4 ஆயிரம் மற்றும் கோப்பையும், 3-வது இடம் பெற்ற குமாரசாமி பொறியியல் கல்லூரி அணிக்கு ரூ.3 ஆயிரம் மற்றும் கோப்பையும், 4-வது இடம் பெற்ற டி.என்.பி.எல். கைப்பந்து அணிக்கு ரூ.2 ஆயிரம் மற்றும் கோப்பையும் வழங்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் அனைவருக்கும் காகித நிறுவனத்தின் சார்பாக இலவச நோட்டுப்புத்தகங்கள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற அணிக்ளுக்கு காகித நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் மின்னியல் - கருவியியல்). பாலசுப்பிரமணியன் பரிசு கோப்பையினை வழங்கினர். இதில் கரூர் மாவட்ட கைப்பந்து கழகத்தின் அசோசியேட் செயலாளர் முகமது கமாலுதீன், ஆலோசகர் சுரேஷ், இணை செயலாளர் ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.